**சிந்தனைக்களம்!**

# சென்னைவாசிகளின், 'காதல் தேவதை!'

**சென்னையில், முதல் முறையாக, சுரங்க ரயில் சேவை துவங்கப்பட்டுள்ளது. ரயில் என்றாலே, சந்தோஷம்; அதுவும், சுரங்கத்தில் ரயில் என்றால், கேட்கவே வேண்டாம்! தரையிலும், கீழும், 20 மீட்டர் ஆழத்தில், மிகவும் நேர்த்தியாக மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**



– ஜெனிபர் பிரேம் –

சமீப காலமாக, கடுமையான போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவிக்கிறது சென்னை. லட்சக்கணக்கான மக்கள், ஒவ்வொரு நாளும், வேலைக்காக சென்னைக்கு வந்து செல்கின்றனர். எத்தனையோ மேம் பாலங்களை கட்டினாலும், நெரிசலை கட்டுப்படுத்த முடியவில்லை.

எனவே, 5,000 தொழிலாளர்கள், 10 ஆண்டுகளாக உழைத்து, மெட்ரோ ரயில் சேவையை சென்னைக்கு தந்துள்ளனர். இவர்களில், பெரும்பாலானோர், வட மாநிலத்தவர். அவர்களது கடின உழைப்பால் உருவானது தான், சென்னை மெட்ரோ ரயில் சேவை.

சென்னையில், 24 கி.மீ., சுரங்கத்திலும், 21 கி.மீ., தரையிலும் கட்டப்பட்டுள்ளது. ஆச்சரியமா இல்லை...

சென்னை போன்ற, பெரு நகரத்தில், சுரங்கம் அமைப்பது, அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அண்ணா சாலை, பூந்தமல்லி மிக முக்கிய சாலைகள்; இங்கு போக்குவரத்தை, ஒரு வழிப் பாதையாக மாற்றி, இந்த சாலைகளுக்கு அடியில், சுரங்கப் பணிகள் நடைபெற்றன.

பல விதமான தொழில்நுட்ப இயந்திரங்களை வைத்து, நீர் நிலைகளை அடைத்து, இந்தப் பணியை மிகவும் சிறப்பாக செய்துள்ளனர்.

அடிக்கடி, இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களில், யாராவது ஒருவர் இறந்து விடுவர்; இப்படி, பலரது உயிர் தியாகத்தில் உருவானது தான், மெட்ரோ ரயில்.

இந்த சாலைக்காக, சென்னை மக்கள், கடந்த, 10 ஆண்டுகளில், பட்ட பாடு கொஞ்சம் நஞ்சம் அல்ல. ஆனால், இப்போது, அழகான மெட்ரோ நிலையமாக பார்க்கும் போது,,கண்களில் கண்ணீர் வருகிறது.

நம் வரி பணம், முதல் முறையாக, நமக்கு மிகவும் பயன்படும் வகையில், அழகான மெட்ரோ நிலையங்களாக நிற்பதை பார்ப்பதற்கு, மிக மகிழ்ச்சியாக உள்ளது.

கூவம் ஆற்றிற்கு கீழே, சுரங்கம் தோண்டும் போது, கடின பாறைகள் இருந்தனவாம். அதை எல்லாம் தகர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுள்ளனர். எந்த நேரத்திலும், கூவம் ஆற்றில் இருந்து, தண்ணீர் பாய்ந்து வரலாம் என்ற நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் பல செய்யப்பட்டன.

வெளி நாடுகளில் தான் இப்படி எல்லாம், சுரங்கப் பாதையில் ரயில் செல்லும். அதுவும், அவர்களது ரயில்வே ஸ்டேஷன்களை பார்த்தால், பள... பள... வென, தரைகள், கண்களில் ஒத்திக் கொள்வது போல், பளீச்... என்று சுத்தமாக இருக்கும்.

இப்போது, சென்னையில் இவற்றை பார்க்க, மனம் இறக்கை கட்டி பறக்கிறது. மெட்ரோ ரயில் நிலையத்தின் நுழைவாயில்கள், வெளியே பார்ப்பதற்கு மிகவும் சிறியதாக தான் இருக்கும்.

ஆனால், படிகளில் இறங்கி, கீழே செல்லச் செல்ல மிகவும், அழகான ஒரு பிரமாண்டமான உலகத்தையே பார்க்கலாம். 62 பளிங்கு படிக்கட்டுகள்; 36 அழகான, நகரும் படிக்கட்டுகள்; 15 லிப்ட்கள் என, 'வெளிநாட்டில் நுழைந்து விட்டோமா...' என, நினைக்கும் அளவிற்கு உள்ளது மெட்ரோ நிலையங்கள்.

மெட்ரோ ரயிலை பெண்களும் ஓட்டுகின்றனர்; 'மெட்ரோ ரயில் எங்களுக்கு ஒரு குழந்தை மாதிரி...' என்கின்றனர்

சென்னையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, மெட்ரோ ரயில் சேவை வந்து விட்டாலும், சென்ட்ரல் ரயில் நிலையம் வரை இணைப்பு கொடுக்கப்பட்டு, அந்த வழித்தடத்தில் ரயில் ஓடியவுடன் தான், மக்கள் மத்தியில் மிகுந்த சந்தோஷமும், பரபரப்பும் ஏற்பட்டது.

அலுவலகம் முடிந்து, 6:00 மணியில் இருந்து, பேருந்திற்காக காத்திருந்து, படிக்கட்டில் தொங்கியபடி ஒரு பக்கம் சாய்ந்து வரும் பேருந்தில் ஏறி, சிக்கி சிதைந்து, ஆங்காங்கே ஏற்படும் போக்குவரத்து நெரிசலால், பேருந்திற்குள், வியர்த்து, விறு விறுத்து, மணிக்கணக்காக நின்று, ஒரு வழியாக, வீடு வந்து சேர்வதற்குள், உடலில் இருக்கும் பலம் எல்லாம் போய் விடும்.

சிலர், ஷேர் ஆட்டோவில் செல்வர்; அப்படியும் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தான் ஆக வேண்டும். ஊபர், ஓலா அலுவலகத்திற்கு வந்து, ஏற்றிச் சென்றாலும், தினமும் இதில் செல்வது, 'பட்ஜெட்' இடிக்கும்.

அப்படியே சென்றாலும், பேருந்தில் செல்பவர்களை விட, கொஞ்சம் சீக்கிரமாக வீட்டிற்கு செல்லலாம்... அவ்வளவே!

கார்ப்பரேட் கம்பெனிகள், தங்கள் அலுவலக பணியாளர்களை, வீட்டிற்கே வந்து ஏற்றி, இறக்கி விட்டாலும், இவர்களும் சென்னை போக்குவரத்தில் சிக்கி, அலுவலகம் சென்று வர, நான்கு மணி நேரம் ஆகிறது.

நைந்து, தொய்ந்து, வந்த வேகத்திலேயே, பிள்ளைகளை பார்க்க வேண்டும்; படிப்பு, டியூஷன் பொறுப்புகளை கவனிக்க வேண்டும். அடுத்து, இரவு உணவு தயார் செய்ய வேண்டும்; அடுத்த நாளுக்கான ஆயத்தங்களையும் செய்ய வேண்டும்.

இவற்றை எல்லாம், எதற்காக சொல்கிறேன் என்றால், இவ்வளவு கஷ்டங்களில் இருந்து அலுவலகம் செல்வோரை காப்பாற்றும், தேவதுாதனை போல் வந்துள்ளது மெட்ரோ ரயில்.

மேலும், சாலையில், 45 நிமிடத்தில் செல்ல வேண்டிய இடத்திற்கு, 10 நிமிடங்களில், நம்மை அலுங்காமல், குலுங்காமல், குளு... குளு... 'ஏசி' பெட்டி, எந்த வித சோர்வு, மாசு இல்லாமல், சீக்கிரமாக அழைத்து செல்வதால், சென்னை வாசிகளின், 'காதல் தேவதை' ஆகி விட்டது.

இரு சக்கர வாகனங்களில், மணிக்கணக்கான போக்குவரத்து நெரிசலில் சிக்கி, தவித்து, முதுகு வலியால் அவதிப்பட்ட, சென்னை இளைஞர்கள், இன்று, ஹாயாக மெட்ரோ ரயிலில் அலுவலகம் செல்கின்றனர்.

மெட்ரோ ரயில் நிலையத்தின் தரை தளத்திற்குள் நுழைந்தால், விமான நிலையத்தில் நுழைவது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

டிக்கெட் வாங்க, பணம் கட்டியவுடன், 'டோக்கன்' தருவர்; நம் உடமைகளை, 'ஸ்கேனர்' இயந்திரத்தில் சோதனை செய்த பின், தானியங்கி மிஷினில் காயினை காண்பித்தால், உள்ளே, நாம் செல்வதற்கான வழிகள் திறக்கும்.

அதற்குள் நுழைந்தால், மேலே, கீழே, நடுவில் என, மூன்று அடுக்குகளில் ரயில்கள் செல்கிறது; நாம் செல்ல வேண்டிய அடுக்கில், எஸ்கலேட்டர் மூலம் நுழைந்தால், ரயில் நிற்கும் தளம் வந்து விடும்.

அழகான மெட்ரோ ரயில், மூன்று, நான்கு நிமிடங்களுக்கு ஒன்று, என, வந்தபடியே இருக்கும்.

அதில் ஏறி உட்கார்ந்து, மொபைல் போனை பார்த்தபடியே, நம் இன்ப பயணம் துவங்குகிறது; கண் மூடி திறப்பதற்குள், இறங்குமிடம் வந்து விடுகிறது.

'வாவ்... அவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு வந்துட்டோமா... டிராபிக் இல்லை... வியர்வை இல்லை... ரொம்ப ஜாலியா இருக்கு' என, மனம் குதுாகலிக்கிறது.

தற்போது, ஒரு நாளைக்கு, 80 – 90 ஆயிரம் பேர் பயணிக்கின்றனர்; மெட்ரோ நிர்வாகத்தினரின் குறிக்கோள், ஒன்றரை லட்சம் பேர்.

மெட்ரோ ரயிலை பெண்களும் ஓட்டுகின்றனர்; 'மெட்ரோ ரயில் எங்களுக்கு ஒரு குழந்தை மாதிரி...' என்கின்றனர்.

காலை, 6:00 மணி முதல், இரவு, 10:00 மணி வரை, ரயில்கள் இயங்கி வருகின்றன. தேவைப்பட்டால், காலை, 4:00 மணி முதல், இரவு, 11:00 மணி வரை இயக்கும் எண்ணமும், உண்டு; இந்தியாவிலேயே, சென்னையில் தான் முதலாவது, நீளமான மெட்ரோ ரயில்வே நிலையம் அமைத்துள்ளனர்.

இவ்வளவு சிறப்பு மிக்க மெட்ரோ ரயில் நிலைய, பிளாட் பார்மில், பணியாளர்கள் இல்லாததால், பாதுகாப்பு குறைவாக உள்ளது. படிக்கட்டுகளில், இறங்கி வரும் இடங்களிலும், பணியாளர்களை போட வேண்டும்; பெண்களுக்கு பாதுகாப்பு அவசியம்.

மக்கள் நெருக்கடி நிறைந்த, நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில், சில ஆண்டுகளுக்கு முன், ஸ்வாதி என்ற இளம் பெண்ணை, இளைஞன் வெட்டிக் கொன்றது நாம் அறிந்ததே...

எனவே, மெட்ரோ ரயில் நிலையங்களில், உள்ளேயும், வெளியேயும் பாதுகாப்பு பணியாளர்கள் அமர்த்தப்பட வேண்டும்.

அத்துடன், சமீபத்தில், மெட்ரோ நிலைய லிப்ட்டில், ஒரு இளம் பெண் தனியாக பயணிக்கிறார். அப்போது, உள்ளே நுழைந்த இளைஞன் ஒருவன், அவளை தாறுமாறாக அடித்து, கை பையை பிடுங்கி செல்வது போன்ற காட்சி, 'வாட்ஸ் ஆப்' போன்ற வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இவை எல்லாம் பெண்களுக்கு எச்சரிக்கை; ஏதாவது, அசம்பாவிதம் ஏற்பட்டு விட்டால், அதன் பின், மெட்ரோ ரயிலில் பயணிக்க மக்கள் பயப்படுவர்; இவ்வளவு நல்ல திட்டம் வீணாய் போய் விடக் கூடாது.

சென்னையில் வசிக்காதவர்கள், இந்த மே மாத விடுமுறை தினத்தை கழிக்க, சென்னைக்கு வாங்க; குடும்பத்துடன் மெட்ரோ ரயிலில் பயணித்து, சுகமாய், 'என்ஜாய்' செய்யுங்க!

இ – மெயில்: jjaneepremkumar@gmail.com

